*பிரசங்கம் 1*

# பிரிவினைகள் வரும்போது

## (1 கொரிந்தியர் 1:10-12)

*கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் பவுல், அங்கிருந்த பிரிவினையை முக்கிய பிரச்சனையாக குறிப்பிட்டார் (1:10-12). சபை முழுக்க பரவி உள்ளூர் சபை அனுபவிக்கிற பிற பிரச்சனைகளுக்கும் இதுவே ஆதாரமாக இருந்தபடியால் முதலில் இந்தப் பிரச்சனையைக் குறித்து பேசுகிறார் என்பது நிச்சயம்.*

### பிரிவினை எனும் சாபம்

ஆரம்பம் முதல் இன்று வரை சபையை பிரிவினை தான் சாபத்துக்குள்ளாக்கிக் கொண்டிருக்கிறது. சபை ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக, கிறிஸ்து பூமியில் ஊழியம் செய்து கொண்டிருந்த அந்த நாட்களிலேயே, தேவனுடைய ராஜ்யத்தில் இயேவின் சீஷர்களுக்குள் எவன் பெரியவனாயிருப்பான் என்று வாக்குவாதம் செய்தனர் (மத்தேயு 20:20-28). தம்மைப் பின்பற்றி வருவோருக்குள் பிரிவினையாகிய பிரச்சனை இருக்கும் என்பதை முன்னறிந்துதான் இயேசு, கெத்சமனே தோட்டத்தில் தம்மை விசுவாசிப்பவர்கள் எல்லோரும் ஒன்றாயிருக்கும்படி ஜெபம் பண்ணினார் (யோவான் 17:20, 21).

பெந்தெகோஸ்தே நாளில் சபை துவக்கப்பட்ட பின்பு (நடபடிகள் 2), கிறிஸ்துவின் சீஷர்களுக்குள் பிரிவினை விரைவில் வெளிப்படையாகத் தோற்றமளித்தது. குறிப்பிடத்தக்க முதல் பிரிவினையாகிய பிரச்சனை எருசலேமிலிருந்த கிரேக்க யூதமார்க்க கிறிஸ்தவர்களானவர்களுக்கும், வம்சாவளி எபிரேயராகிய யூத மார்க்கத்திலிருந்து கிறிஸ்தவர்களானவர்களுக்குமிடையே ஏற்பட்டது (நடபடிகள் 6). அப்போஸ்தலர் நடபடிகளின் கடைசி பத்தொன்பது அதிகாரங்களில் பெரும்பகுதி யூத கிறிஸ்தவர்களும் கிரேக்க கிறிஸ்தவர்களும் எப்படி ஒரே சபையாக இணைந்திருக்க முடியும் என்பதைக் காட்டுகிறது.

சபை தோன்றிய இடமெல்லாம், பிரிவினைகளும் தொடர்ந்தது. ரோமாபுரி சபையில் இருந்த யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையே, குறிப்பாக மாமிசம் புசிக்கிற விஷயத்தில் பிரிவினைகள் உண்டானது தெளிவாய்க் காணுகிறது (ரோமர் 14).[1] பிலிப்பிபட்டணத்து சபை நல்ல ஒரு சபைதான், ஆகிலும் அவர்கள் பிரிவினையுள்ளவர்களாயிருக்கக் கூடாது என்று பவுல் அறிவுறுத்த வேண்டியிருந்தது. "ஏக சிந்தையுள்ளவர்களாக" இருக்க எயோதியாளுக்கும் சிந்திக்கேயாளுக்கும் அவர் புத்தி சொன்னார் (பிலிப்பியர் 2:2; 4:2). கலாத்திய நாட்டுச் சபைக்கு பவுல் தமது நிருபத்தை எழுதினபோது, மாம்சத்தின் கிரியைகளாகிய, "சண்டைகள்," "பிரிவினைகள்," "மார்க்க பேதங்கள்," "பொறாமைகள்" ஆகியவைகளைக் குறித்து எச்சரித்தார் (கலாத்தியர் 5:20, 21).

*பிரிவினைகள் என்பது முதல் நூற்றாண்டுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்படவில்லை. தங்களை கிறிஸ்தவர்கள் என்று அழைத்துக் கொள்பவர்களிடம் சண்டைகளும் பிரிவினைகளுமாகிய வாதை வரலாறு முழுவதும் காணப்பட்டது மற்றும் இன்று வரை விசுவாசிகளை தொடர்ந்து பிரித்துக் கொண்டுள்ளது.*

*கிறிஸ்தவம் இன்று பெரிய பிரிவுகளான- புராட்டஸ்டண்ட், என்றும் கத்தோலிக்கம் என்றும் பிரிந்து காணப்படுகிறது. இந்த பெரிய பிரிவுகளுக்குள் உட்பிரிவுகளாக அல்லது வகைகளாக பிரிந்து காணப்படுகின்றது. உண்மையில் நூற்றுக்கணக்கான கூட்டங்கள் புராட்டஸ்ட்ண்டுகளாகவோ அல்லது கத்தோலிக்கமில்லாத கூட்டங்களாகவோ இருக்கின்றன. எந்த பிரிவு (நாமகரண) கூட்டத்தையும் சாராமல் (குறிப்பிடாமல்) சுயேச்சை ஊழியம் எனும் பெயரில் ஆயிரக்கணக்கான குழுக்கள் மலிந்து கிடக்கின்றன.*

*இவைகளுக்கப்பால், உள்ளூர் சபைகள் - கொரிந்துவிலிருந்த சபை போன்றவைகள் - சண்டைகளையும், அங்கத்தினர்கள் மனம் புண்படும் அளவுக்கான பிரிவினைகள் ஏற்பட்டு, அவர்கள் சபை ஆராதனையை விட்டுவிடவும், அந்த உள்ளூர் சபையை இரண்டு கூட்டங்களாக பிளவுபடவும் செய்துவிடுகிறது.*

*கிறிஸ்துவில் விசுவாசம் கொண்டிருப்போர் மத்தியில் பிரிவினைகள் இருப்பது ஒரு நல்ல சூழல் அல்ல, ஆனால் அது கிறிஸ்துவின் காரணத்திற்கு ஒரு சாபம். ஏன்? ஏனெனில் அது தேவனுடைய சித்தத்தை முரண்பாடாக்குகிறது. தம்மை விசுவாசிக்கிற யாவரும் ஒன்றாயிருக்கும்படி இயேசு ஜெபித்தார் (யோவான் 17:21), மற்றும் பவுலும் கொரிந்தியர்கள் ஒன்றாயிருக்கும்படி அறிவுறுத்தினார் (1 கொரிந்தியர் 1:10). எண்ணங்களிலும், உபதேசங்களிலும் செயல்களிலும் சபை ஐக்கியப் பட்டிருக்க வேண்டும் என்பது தேவனுடைய திட்டம் என்று அவர் விளக்கமளிக்கிறார் (எபேசியர் 4:1-16). பிரிவினையானது உலகத்தில் அவிசுவாசத்தை கொண்டுவருவதாக இயேசு குறிப்பிட்டார். "... உலகம் விசுவாசிப்பதற்காக" எல்லாரும் ஒன்றாயிருக்கும்படி அவர் ஜெபித்தார் (யோவான் 17:21). ஐக்கியமின்மை ஜனங்களை (தங்கள் ஆத்துமாக்களை) இழந்து போகக் கூடச் செய்யும்.*

## பிரிவினைக்கான காரணம்

*பிரிவினை சாபமாயிருப்பதால், அதை சம்பவிக்க நாம் ஏன் அனுமதிக்க வேண்டும் என ஆச்சரியப்படலாம். சபையில் இருக்கும் மக்கள் ஏன் பிரிந்திருக்கிறார்கள்? சிறந்ததும், எளிமையுமான பதில், "ஏனெனில் அவர்கள் ஜனங்கள்." அதாவது, ஒருவருக்கொருவர் பிரிந்திருக்கும் சுபாவம் பெற்றது மனிதவர்க்கம், ஆனதால் அவர்கள் விழுந்துபோகும் தன்மையுள்ளவர்களும், பாவஞ்செய்யும் போக்கையும் கொண்டவர்கள்.*

*உண்மையில், மனித வரலாறே பிரிவினைக்குணத்திற்கு இடமளிக்கும் ஒன்று. காயீன் ஆபேலைக் கொலை செய்துவிட்டு, குடும்பத்திலிருந்த மற்றவர்களை விட்டுபிரிந்து போனான். யாக்கோபு மற்றும் ஏசா பிரிந்தார்கள். யோசேப்பின் சகோதரர்கள் அவரை அடிமையாக விற்றுப் போட்டார்கள். எகிப்தியர் இஸ்ரவேலரை அடிமைப்படுத்தினார்கள். மிகப் பெரிய சமய எதிர்ப்பு யாத்திராகமம் 32ம் விரிவாக குறிப்பிடப்படுகிறது. இஸ்ரவேலரில்*

அநேகர் பொன்கன்றுக்குட்டியை வணங்கினார்கள்; ஆனால் அவர்களில் சிலராகிய - லேவியர்கள் - விசுவாச எதிர்ப்பிற்கு தலைமை வகித்தவர்களை தண்டிக்கும்படி அழைக்கப் பட்டார்கள். தாவீதின் நாட்களில், அப்சலோம் தனது தகப்பனுடைய இராஜ்யத்தை எடுத்துக்கொள்ளும் பொருட்டு அநேகஜனங்களை தன்வசப்படுத்தினான். சாலொமோனின் மரணத்திற்குப்பிறகு ஒன்றுபட்டிருந்த இராஜ்யம் இரண்டாக பிளவுபட்டது. பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் தேவனுடைய மக்களின் வரவாற்றில், சமுதாய யுத்தங்கள், அமைதியின்மை மற்றும் பிரிவினைகள் நிறைந்ததாக இருந்தது.

தேசீய வரலாற்றிலும் தனி வரலாற்றிலும் ஜனங்கள் பிரிவினைகளை ஏற்படுத்திக் கொள்ளும் தன்மையுடையவர்கள் என்ற முடிவை மீண்டும் வலியுறுத்துகின்றன. தேசங்கள் மற்ற தேசங்களுடன் போரிடுகின்றன, நாடுகள் சமுதாயச்சண்டைகளைச் சந்திக்கின்றன; வித்தியாசப்பட்ட மதம் சார்ந்த துணைக்குழுக்கள், சிலவகுப்பினர் மற்றும் ஜாதியினர் சமாதானத்தோடு ஒன்று சேர்ந்து வாழ மறுக்கின்றனர். அரசியல்கட்சிகள் சொல்லாலும் செயலாலும், சில வேளைகளில் சரீரக்காரியங்களிலும் முரண்படுகின்றனர், உள்பூசல்களினால் சமுதாயங்கள் பிளவுபடுகின்றனர் ஒரே வியாபாரத்தில் பணியாற்றும் மக்கள் சிறு சிறு உட்(பிரிவு) குழுக்களை ஏற்படுத்திக் கொண்டு பேதகங்களோடு சண்டையிடுகின்றனர். பிரிவினைகளாகிய பிரச்சனைகள் உள்ள இடம் நிச்சயமாக சபை மட்டுமல்ல.

ஜனங்கள் பிரிவினை எண்ணம் உடையவர்களாயிருக்க காரணம் என்ன? பேராசை, அளவுக்கு மிஞ்சிய பொருளாசை, பெருமை, பொறாமை, சுயநலம், அறியாமை, மற்றும் பகைமை ஆகியவை உலகில் இருக்கும் பரியந்தம், ஜனங்களின் நட்புறவு முறையில் சாபத்தீடான பிரிவினை இருக்கவே செய்யும். *சபையில் பிரிவினைகள் ஏற்படும்பொழுது, சபைமக்கள் உலகத்தாரைப்போல் நடந்து கொள்கின்றனர்!* கொரிந்துவிலிருந்த சகோதரர்கள் தங்களுடைய உலகப்பிரகாரமான குணாதிசயங்களைவிட வேண்டியவர்களாயிருந்தனர் (குழந்தைத்தனமான நடத்தைகள், 1 கொரிந்தியர் 3:1-3 ஐக்காண்க) "தெய்வீக தன்மையைத்" தரித்துக்கொள்ள வேண்டியவர்களாயிருந்தனர் (2 பேதுரு 1:4).

## பிரிவினைக்கான நிவாரணி

சபை பிரிவினைகளைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகவே 1 கொரிந்தியர் நிருபத்தின் பெரும்பகுதி எழுதப்பட்டது. இந்தப் பிரச்சனையைத்தீர்க்க என்ன செய்யக் கூடும்?

*முதலாவதாக, மனிதனை அல்ல, கிறிஸ்துவை மட்டும் பின்பற்றவேண்டும்.* மனிதர்களைப் பின்பற்றுவதே கொரிந்துபட்டணத்து கிறிஸ்தவர்களின் பிரச்சனை (1:12). வெகு அதிகமான (உள்ளூர்) சபைகள் மனிதர்களைப் பற்றுவதினாலேயே பிரிவினைகளைக் கொண்டுள்ளன.

*இரண்டாவதாக, கிறிஸ்துவின் சுவிசேஷத்தையும் அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பிரசங்கிக்கவேண்டும்.* கொரிந்துவில் பவுல் அதைத்தான் செய்தார் (2:1-4). தேவஞானத்தை ஏற்றுக்கொள்வது என்பது, ஆவியானவர் ஏவி எழுதிய அவருடைய வசனத்தை ஏற்றுக்கொள்வது (2:12, 13).

*மூன்றாவதாக, வளருங்கள்!* (3:1-4 ஐ காண்க.) மனிதர்களைப் பின்பற்றி பிரிவினையுடையோராய் நாம் இருக்கும் போது, நாம் ஆவிக்குரிய

குழந்தைகளைப் போல் நடந்து கொள்கிறோம். அப்படிப்பட்ட எண்ணங்கள் மாம்சத்துக்குரியதும் - உலகத்தாரைப் போன்றதுமாகும்.

*நான்காவதாக, நமது சச்சரவுகள் நமக்குள்ளாகவே இருக்கட்டும்.* கொரிந்து சபையிலிருந்த பிரச்சனைகளில், சகோதரர்கள் ஒருவருக்கொருவர் வழக்காடும்படி அநீதிக்காரனிடத்தில் போனதும் ஒன்று (6:1-8). இப்படிச் செய்வதற்குப் பதிலாக வழக்குகளைத் தீர்க்க அவர்களுக்குள் இருக்கிற ஒரு "விவேகி" யினிடத்தில் அவர்கள் கேட்டிருக்கலாம் என்று பவுல் சொன்னார் (6:5). சகோதரனுக்கு விரோதமாக வழக்காடு மன்றத்தை நாடுவதை விட அநியாயத்தை பொறுத்துக் கொள்வது சிறந்தது என்றும் மேலும் குறிப்பிடுகிறார் (6:7). அதே போல நாமும் நமது வழக்குகளை நமக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டும். நமது முன்னோடிகளை நாம் நம்ப வேண்டும், நம்முடைய சகோதரர்களை நாம் நேசிக்க வேண்டும், நமது சொந்த உரிமைகளையும், சலுகைகளையும் உலகப் பொருள்களையும் விட சபையையும் கிறிஸ்துவின் மகிமையையும் அதிகமாக மதிப்பிட வேண்டும்.

*ஐந்தாவதாக, கிறிஸ்தவ சுயாதினத்தை தவறாகப் பயன்படுத்தாதிருங்கள்.* அதிகாரங்கள் 8-10ல், விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளை புசிக்கிற விஷயங்களின் மீது பவுல் கவனம் செலுத்துகிறார். விக்கிரகமானது ஒன்றுமில்லை என்று சொன்னார்; ஆதலால் விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகள் கிறிஸ்தவர்களுக்கு சட்டரீதியான உணவு, ஆயினும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இந்த விஷயத்தில் அறிவு பெற்றவனாக இருப்பதில்லை. விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்ட மாமிசத்தை உடன் சகோதரன் ஒருவன் உண்ணக் கண்டால் தானும் அப்படிச் செய்ய சோதிக்கப் படக்கூடும்; அப்படிச் செய்யும் போது, அவர்களின் மனச்சாட்சி அவர்களுக்கு இடறலை ஏற்படுத்தும் (1 கொரிந்தியர் 8:7-13). விக்கிரகங்களுக்கு படைக்கப்பட்டவைகளை புசிக்கிற கிறிஸ்தவர்களினிமித்தம் அவர்கள் பாவஞ்செய்ய ஏதுவாகும். இந்த சூழ்நிலையிலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்ன? ஒற்றுமையை காக்க சிலவேளைகளில் நமது உரிமைகளையும் கூடவிட்டுக் கொடுக்க வேண்டிதாயிருக்கலாம். நாம் பவுலைப் போன்ற எண்ணமுடையவர்களாயிருக்க வேண்டும்: 8:13ல் அவர் மாமிசம் புசிப்பது ஒரு சகோதரனுக்கு இடறலாயிருப்பின், என்றைக்கும் தான் மாமிசம் புசியாமலிருப்பார் என்று குறிப்பிடுகிறார்.

*ஆறாவதாக, மற்றவர்களுடன் ஐக்கியப்பட்டு ஒன்றாக ஆராதிப்பதை குறித்து நினைத்துப் பாருங்கள்.* அதிகாரம் 11ல் பவுல் கொரிந்தியருடன் விவாதிக்கும் ஒரு பிரச்சனை ஐக்கியமாக விருந்திலே பங்கேற்பதைப் பற்றியது. ஒருவருக்காகவும் காத்திராமலும், அவரவர் தங்களுக் கென்று கொண்டு வந்த உணவைப் புசித்தனர். அதன் விளைவாக பலர் திருப்தி அடைந்தார்கள், மற்றவர்கள் பசியுடன் இருந்தனர் (11:21). அதிகாரம் 14ல் அந்திய பாஷை பேசும் வரங்களைப் பயன்படுத்திய விதத்தில் குறிப்பிட்ட குழப்பம் ஆராதனையில் ஏற்பட்டதைக் குறித்து பவுல் போதித்தார். ஆவிக்குரிய வரங்களாகிய அந்நிய பாஷை மற்றும் தீர்க்கதரிசன வரத்தைப் பயன்படுத்துவது குறித்து அவர் போதனை கொடுத்தார். சபை கூடிவரும் போது எல்லாரும் பக்தி விருத்தியடைய வேண்டும் அல்லது கட்டப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். 14:40ல் எல்லாம் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப் படக் கடவது என்று முடிவுரையாகக் குறிப்பிட்டார். நாம் கூடிவரும் போது மற்றவர்களைக் குறித்தும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

*ஏழாவதாக, தேவன் கொடுத்த வரங்களைக் கொண்டு பொறாமை கொள்ளாமலும் சகோதரர்களைத் தாழ்ச்சியாய்ப் பாராமலும் பயன்படுத்த வேண்டும்.* அதிகாரம் 12ல் கர்த்தர் கொடுத்த ஆவிக்குரிய வரங்களைக் குறித்து கொரிந்து கிறிஸ்தவர்கள் முணுமுணுத்து அமளிபண்ணினர். சிலர் மற்றவர்களுக்கு இருந்த வரங்களைக் குறித்து பொறாமை கொண்டு தங்களுக் கென்று கொடுக்கப்பட்ட வரங்கள் ஒன்றுமில்லை என்றும் கருதினர். சிலர் தங்களுக்கு இருந்த வரங்களைக் குறித்து பெருமை பாராட்டினர், ஆதலால் மற்றவர்களை மட்டமாகப்பார்த்து, அவர்கள் தங்களைக் காட்டிலும் தாழ்வான வரங்களைப் பெற்றிருந்ததைப் போல் பார்த்தனர். ஆவிக்குரிய அனைத்து வரங்களுமே அவசியமானதும் பயனுள்ளதுமாகும் என்று பவுல் குறிப்பிட்டார். இன்று ஒன்றுபட்டிருக்க, சபை அங்கத்தினர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தாலந்து (திறமை)களை தேவனுடைய மகிமைக் கென்றும் சபையின் உபயோகத்திற்கென்றும் எவ்வித முறுமுறுப்பும், பொறாமையுமின்றி பயன்படுத்த வேண்டும்.

*எட்டாவதாக, அன்பை வலியுறுத்துங்கள்.* ஆவிக்குரிய வரங்களை பவுல் விவாதித்துக் கொண்டிருக்கையில், இடையில் நிறுத்தி, அன்பே மேன்மையான வரம் என்பதைக் குறிப்பிட்டார் (அதிகாரம் 13). 1 கொரிந்தியரில் விவாதிக்கப்படும் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் அன்பே சரியான நிவாரணம் என்று கூறப்பட்டது.

*ஒன்பதாவதாக, சுவிசேஷத்திற்கு அடிப்படையாய்க் காணுகிற உபதேசத்தை பிடித்துக் கொள்ளுங்கள்.* அதிகாரம் 15ல் மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்த உபதேசத்தை பவுல் எழுதினார். ஏனென்றால் சில சபையார் மரித்தோர் உயிர்த்தெழுதலை மறுத்தனர். கொரிந்தியர்கள் சுவிசேஷத்தின் சாராம்சங்களை பற்றிக் கொண்டிருக்க வேண்டியவர்கள். அதேபோல, நமது ஐக்கியத்துக்காக தேவனுடைய வசனத்தின் சாராம்சங்களை எப்போதும் விட்டுவிடக் கூடாது.

*பத்தாவதாக, மற்றவர்களுக்கு உதவிசெய்கிற காரியங்களில் எப்பொழுதும் ஒன்றிணைந்து பங்கேற்றுக் கொள்ளுங்கள்.* அதிகாரம் 16ல், எருசலேமில் இருக்கிற ஏழை பரிசுத்தவான்களுக்கு உதவி செய்ய அவர்கள் எப்படித் தங்களை ஆயத்தப்படுத்த வேண்டும் என்பதை சகோதரர்களுக்கு பவுல் சொன்னார். பவுல் அங்கு வரும் போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு வாரத்தின் முதல்நாள் தோறும் அவர்கள் கொடுக்கும்படி கூறப்பட்டனர் (16:1, 2). இந்த வசனப் பகுதி அவரவர் அங்கம் வகிக்கும் உள்ளூர் சபையைக் குறித்து அக்கரை கொள்வதை மட்டும் குறிப்பிடாமல், அருகிலும் தொலைவிலும் காணப்படும் சகோதர (உள்ளூர்) சபைகளுடன் கொண்டிருக்க வேண்டிய ஐக்கியத்தையும் பேசுகிறது.

## முடிவுரை

1 கொரிந்தியரில் பவுல் குறிப்பிடுகிற பிரிவினையாகிய பிரச்சனைகளுக்கான நிவாரணத்தை நாம் எப்படிச் சுருக்கமாகக் காணலாம்? மீட்டமைக்கும் இயக்கம் ஆரம்பக் கட்டத்தில் அடிக்கடி பயன்படுத்திய குறிக்கோளை ஒரு வேளை நாமும் தொடர்ந்து பயன்படுத்தலாம்.

> தேவையானவற்றில், ஐக்கியம்.
> சூழ்நிலைகேற்ற விஷயங்களில், சுயாதீனம்.

*எல்லாவற்றிலும், நேசம் (அல்லது அன்பு).*

*மேற்குறித்த குறிக்கோள்களில் முதலாவது வாக்கியத்தை கைக்கொள்ள, கிறிஸ்தவ விசுவாசத்தின் சிலகருத்துக்களோடு சமரசம் செய்ய இயலாது. ஒரே காரியத்தை விசுவாசிக்கவும் போதிக்கவும் வேண்டும் என்று அவர் கொரிந்தியர்களிடம் விரும்பினார் (1:10). "கிறிஸ்துவையும் அவர் சிலுவையிலறையப்பட்டதையும்" பிரசங்கிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்துகிறார் (2:2). சில கொரிந்து சபையினர் மரித்தோர் உயிர்த்தெழுதலை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும்,அது குறித்த உண்மையான கருத்துக்களை பவுல் வலியுறுத்தினார் (அதிகாரம் 15) இருப்பினும் கூட, ஐக்கியத்தை தேடுவதில் சத்தியத்தை ஒரு போதும் தியாகம் செய்துவிடக் கூடாது. சத்தியத்திற்கென நாம் உறுதியாய் நிற்போமாகில், சத்தியத்தைப் புறக்கணிந்து நம்மை விட்டு போய்விட மனதுள்ளவர்களை- நமது பாரமான இருதயத்தோடு - அவர்களை போக விட வேண்டியதுதான். "பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக'' அவசியமான உபதேசக் கோட்பாட்டில் ஒற்றுமை ஏற்படும்போது தான் ஐக்கியம் உருவாகிறது (யூதா 3; எபேசியர் 4:4-6க் காண்க).*

*பவுல் மேலே குறிப்பிட்ட இரண்டாவது குறிக்கோளின் வாக்கியத்தையும் பரிந்துரைக்கிறார், அவர் கிறிஸ்தவ நடைமுறைக் காரியங்களில் குறிப்பிட்ட பகுதிகளில் சுயாதீனம் பற்றி குறிப்பிட்டார். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைப் புசிக்க சுயாதீனம் பெற்றிருந்தனர். இன்று, நமது விசுவாசக் காரியங்களுக்கும் அவைகளை நடைமுறைப் படுத்தும் விஷயங்களுக்கும் உரிய ஒவ்வொரு செயலுக்கும் கர்த்தர் விளக்கமளிக்க வில்லை என்பதை நாம் என்றைக்கும் மறக்கக்கூடாது. சூழ்நிலைக்கேற்ற நிலைமைகளை நாம் அறிவோம்; அந்த வரையறைக்குள், நாம் அல்லது நாம் ஊழியம் செய்யும் சபை முடிவெடுத்துக் கொள்ள சுயாதீனம் பெற்றிருக்கிறோம். இந்தப் பகுதியை பொறுத்த மட்டில், நாம் ஒவ்வொருவரும் அவரவர் பார்வைக் கேற்றவாறு தெரிந்து கொள்ள சுயாதீனத்தை அனுமதிக்க வேண்டும்.*

*முன் குறிப்பிட்ட குறிக்கோளின் மூன்றாவது வாக்கியத்தை பவுல் தொடங்கிவைப்பதற்காக பவுலுக்கு பாராட்டைத் தெரிவிக்க வேண்டும். "எல்லாவற்றிலும் நேசம் (அல்லது அன்பு)." மற்றெல்லாவற்றிலும் அன்பே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று பவுல் குறிப்பிட்டார் (அதிகாரம் 13).*

*நாம் ஒற்றுமையாக இருப்பின், பவுலின் சிபாரிசை நாம் ஏற்றுக்கொள்வது அவசியம். முதலாவதாக, நாம் கிறிஸ்தவ மார்க்கத்தின் பெரிய சத்தியத்துடன் ஐக்கியம் கொண்டு, தேவனுடைய வசனத்தில் போதிக்கப்பட்டதுபோல் விசுவாசக் கோட்பாட்டின் அவசியமானவைகளில் ஒன்றிணைந்து உறுதியாய் நிற்க வேண்டும். இரண்டாவதாக, சூழ்நிலைக்கேற்ற விஷயங்களில் எது சரியானதாக நாம் எண்ணுகிறோமோ அதை செயல் படுத்த ஒருவருக்கு ஒருவர் சுயாதீனம் பெற அனுமதிக்கப்பட வேண்டும். வேதம் என்ன செய்ய வேண்டும் என்று குறிப்பாகச் சொல்லாத பட்சத்தில் இந்த அனுமதி நமக்கு உண்டு. மூன்றாவதாக, ஒவ்வொரு பகுதிலும் ஒருவருக்கொருவர் நமது அன்பை விளங்கப்பண்ண வேண்டும்! இந்த மூன்று நடைமுறைகளையும் பின்பற்றுவோமாகில், பவுல்*

*போதித்தபடி, நாம் "எல்லாவற்றிலும் ஒத்துப்போவோம்." நமக்குள் பிரிவினைகள் வராது; நாம் "ஒரே காரியத்தை பேசி ஏகமனதும் ஏக சிந்தையும் உள்ளவர்களாக பூரணமாக சீர்பொருந்தியிருப்போம்" (1:10).*

---

குறிப்புகள்

[1]புத்தகம் முழுவதிலும் யூதர்களுக்கும் புறஜாதிகளுக்குமிடையேயான உறவுமுறை குறித்து வலியுறுத்தப்படுகிறது.